# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

தி. பி. 2023 மீனம் (மார்ச்சு—16—31) விலை உருபா 1·50 (இதழ் எண்: 153


# விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்தால், இங்கேயே புலி இயக்கம் தோன்றும்!

## அ.தி.மு.க.விடம் உள்ள பதினேர் உறுப்பினர்களுக்காகவே நரசிம்மராவ் செயலலிதாவுக்குச் செவி சாய்க்கிறர்!

## செயலலிதா வழியாகப் பார்ப்பனீயம் தலைகொழுத்து ஆடுகிறது!

செயலலிதா ஆட்சிக்கு முன்னர் ம.கோ.இரா. ஆட்சியில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தமிழகத்தில் நல்ல வாய்ப்புகளும் தொடர்புகளும் உருவாகின. நேரடியாகவும் சில நேரங்களில் மறைமுகமாகவும் ம.கோ.இரா. புலிகளுக்கு நல்ல நோக்கத்துடன் உதவினர். இலங்கையில் தமிழினம் அழிக்கப்படுவதற்கு உண்மையிலேயே ம.கோ.இரா. உள்ளம் நொந்தார். அதனல் சிங்களவர்களை எதிர்த்துப் போராடும் குழுக்கள் ஒவ்வொன்றுக்கும், ஒன்றுக்குத் தெரியாமல் ஒன்றுக்குத் தம்மால் இயன்ற மட்டும் உதவிகளை அன்பாலும் அக்கறையாலும் செய்து வந்தார். அவ்வாறன உதவிகளை அப்போராட்டக் குழுக்களிலேயே மிகவும் தகுதியுடையது என்று அவர் கரு-

தியதால் புலிகள் இயக்கத்திற்குக் கொஞ்சம் கூடுதலாகவே உதவினார். அவ்வுதவி பொருளாகவும், கருவிகளாகவும், போர்ப் பயிற்சி பெறும் பாசறை அமைப்புகளாகவும் பிறவாறும் இருந்ததை அப் போராளிக் குழுக்களின் தலைவர்களின் வாயிலாகவே நாம் கேள்விப்பட்டு நிறைவடைந்திருக்கிறோம்.

ம.கோ.இரா. செய்த இவ்வுதவிகள் அக்கால் தில்லியில் தலைமையமைச்சராக விருந்த இந்திராவுக்கும் தெரியும். இன்னும் சொன்னால், அவரும் இந்த வகையான உதவிகளை அதே போராளிக் குழுக்களுக்கும் செய்திருக்கிறார். ஆனால் அவருடைய உதவிகளும், ம.கோ.இரா.வின் உதவிகளும் நோக்கங்களில் வேறு வேறாகவிருந்தன. தமிழினத்திற்கு உதவ வேண்டும் என்னும் நோக்கம் ம.கோ.இரா.விற்கு இருந்தது. சிங்களவரைத் தலை மீறாத படி, தென்கிழக்காசிய அரசியலில் தமக்குக் கீழாகவே வைத்திருக்க வேண்டும் என்னும் நோக்கம் இந்திராவிற்கு இருந்தது.

ம.கோ.இரா.விற்குத் தமிழினத்தின் மேல் இருந்த இரக்கத்திற்கும் அக்கறைக்கும் காரணம் அவர் மலையாளத் தமிழர் (திரவிடர் என்பது ஆரியப் படுத்தப் பெற்ற பெயர்) என்னும் இன நல உணர்வு என்க. இனி, இந்திரா உதவினது, செயவர்த்தனவை அடக்கியாளும் அரசியல் தன்னதிகார ஆளுமை நோக்கம் என்க.

இனி, இந்திராவுக்குப்பின் அவர் மகன் இராசீவுக்கும், ம.கோ.இரா.விற்குப்பின் கலைஞர் கருணாநிதிக்கும் அவ்வுதவி நோக்கங்கள் தொடக்கத்திலிருந்தனவேனும், தொடர்ந்திருக்கவில்லை. அத்தற்குக் காரணம், கலைஞர்க்கு இயல்பாகவே தம்மை மதிப்பவர்களுக்கு மட்டுந்தாம் உதவ வேண்டும் என்றிருந்த தந்நலவுணர்வும், இராசீவுக்கு செயவர்த்தனவை அடக்கியாளுவதை விடத் தமிழினம் எவ்வகையானும் எவ்விடத்திலும் முன்னேறக் கூடாது, ஆளுமை பெறக் கூடாது என்னும் பொருமை உணர்வுமே ஆகும். ம.கோ.இரா. போராளிகளிடம் நடந்துகொண்ட பெருந்தன்மைக்கும் அன்பார்வத்திற்கும் அருளாண்மைக்கும் அவர்க்குப் பின்னர் வந்த கலைஞர் நடந்து கொண்ட தற்பெருமைக்கும், அவர்களைக் குறைத்து மதிப்பிட்ட தன்மைக்கும், விளம்பரம் வேண்டிப் புகழ்ச்சி விரும்பிப் பொருளுதவக் கருதிய நோக்கத்திற்கும் வேறுபாடுகள் உண்டு.

இந்த நிலைகளெல்லாம் அடியோடு மாறி, செயலலிதா ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையே ஒடுக்கும் முகமாக, மிகக் கரவான நடவடிக்கைகளால், விடுதலைப் புலிகளை நேரிடையாக அடக்கி ஒழிக்கத் தொடங்கிக் கடந்த ஓராண்டாகத் தீவிரமான மிகக் கொடுமையான கறுப்புச் சட்டங்களைப் பயன்படுத்திப் பலவேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். புலிகளை மட்டுமன்றி அவர்களின் கொள்கைக்கான தமிழக ஆதரவாளர்களையும் அச்சுறுத்தி அடியரிந்து வருகிறார், இதற்கு நரசிம்மராவின்—பிற வட நாட்டுப் பார்ப்பனியத்தின்—பேராதரவும் இருந்து வருகிறது.

நடைபெறும் சட்டமன்றத் தொடரில், அவர் கூறியுள்ள தமிழினத்தைப் பழிவாங்கும் வெறியுணர்வுக் கருத்துகளும், தில்லி ஆட்சியாளர்களுக்குப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யச் சொல்லி அவர், விடுக்கின்ற வேண்டுகோள்களும், தமிழினம் இனி எந்த நிலையிலும் தலை நிமிர்ந்து விடக் கூடாது, உரிமை பெற்றுவிடக் கூடாது என்னும் ஆரியத்தின் உள்ளார்ந்த நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சிகளாகவே உள்ளன. திராவிடம் என்னும் போர்வையில் தமிழக வரலாற்றில் இதுவரை நேர்ந்திராத நிலையில் பார்ப்பனத் தலைமைக்கு அரிதாக ஒரு வாய்ப்புக் கிட்டியவுடன், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்னும் பரபரப்போடும் அழுத்தமான உள்நோக்கத்தோடும், பார்ப்பனியமும் வடவிந்திய இந்தி முதலாளியமும் தமிழினத்தின் மேல் போர் தொடுக்கும் முறைபோலவே, விடுதலைப் புலிகளையும், பிற தமிழ்த் தீவிரக் கொள்கையாளர்களையும் அடக்கவும் அழிக்கவும் தொடங்கியுள்ளன.

விடுதலைப் புலிகளை அடியோடு அழித்து விடுவதற்குப் பார்ப்பனியமும் கச்சைக் கட்டி நிற்கிறது. தமிழீழக் கோரிக்கையையும் அதை ஒட்டி எழுந்துள்ள தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையையும் அவர்களால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

சட்டம், ஒழுங்கு மேம்பாடுறுவதற் கெனும் சாக்கில் காவல்துறையைச் செயலலிதா புதினப் படுத்தவும், தமிழினத்தின் மேல் ஏவி விடவும் தீவிர, நேரடி, மறைமுக முயற்சிகளில் செயலலிதாவும் தில்லி ஆட்சியும் வெறிகொண்டு செயல் படுகின்றனர்.

"பஞ்சாப் தீவிர இயக்கத்தவரும் நக்சலைட்டுகளும் நம் நாட்டுக் குடிமக்கள். அவர்களையும் புலிகளையும் ஒன்றாகக் கருத முடியாது. புலிகள் வெளி நாட்டிலிருந்து இங்கு வந்து பிரிவினையைத் தூண்டி விடுகிறார்கள். விடுதலைப் புலிகள் தமிழகத்தில் தொடர்ந்து ஊடுருவக் கூடாது. இங்கே பிரிவினை இயக்கம் தோன்றக் கூடாது என்பதற்காகத் தான் அந்த இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று கூறுகிறோம்... விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து விட்டால் அந்த இயக்கத்திற்கு ஆதரவு அளித்து வருபவர்களும் குற்றவாளிகளாக்கப் படுவர்" என்றெல்லாம் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைமைப் பார்ப்பனர் செயலலிதா நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்துப் பேசியுள்ளார்.

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

நிறுவனர். பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

**தலைமையகம்: பறம்பை அறிவன், பொதுச் செயலாளர், பறம்புக்குடி. 623 707. முகவை மாவட்டம், தமிழகம்.**

## செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்!

உ.த.மு.க.பொ.செ.ம.எண்: 43/92. 9-3-92

**அமர்த்த அறிவிப்புகள்-3. (7-3-92)**

3—1. உ.த.மு.க. (சமநிலைக் குமுகாய முனைப்பியக்கம்) செயலகம்.

சார்பு அமைப்பு: 1

'தமிழ் வழிபாட்டுப் பேரவை'
நெறியாளர்: திரு. சுப.இலக்குமணன்,
நாதன் ஓவியப் படப் பிடிப்பகம்,
பறம்புக்குடி. 623 707.

3—2 உ.த.மு.க. (கலை வளர்ச்சி இயக்கம்) செயலகம்.

சார்பு அமைப்பு: 1

'தமிழ்ப் பாவலர் திணைக்களம்.'
நெறியாளர்: திரு. அழகு நிலவன்,
19, சிறீநகர், புதுக்கோட்டை. 622 001.

**4. மாவட்ட அமைப்பாளர்கள். (உ.த.மு.க.)**

**O தஞ்சை மாவட்டம்:**
திரு. ந. வை. இளஞ்செழியன்
தமிழ்க்குடில், அம்மையப்பன் பட்டி,
கருக்காடிப்பட்டி (அஞ்) 614 902.

**O திண்டுக்கல் அண்ணா மாவட்டம்:**
திரு. மா. தமிழ்க்கதிர் (தினகரன்)
22, அரசு அலுவலர் கூட்டுறவுக் குடியிருப்பு. திண்டுக்கல்-9.

**O மதுரை மாவட்டம்:**
திரு. திருஞானம் என்ற சிவன்,
பர்மா குடியிருப்பு.
அழகாபுரி, திருமங்கலம் வழி.
மதுரை மாவட்டம்.

**O இராமநாதபுரம் மாவட்டம்:**
திரு. அ. இளம்பிறை.
10, திடல் தெரு,
முதுகுளத்தூர் 623 704.
முகவை மாவட்டம்.

**O வ.உ.சி. மாவட்டம்:**
திரு. பூ.வ.தமிழ்க்கனல், "தமிழ்க் குடில்,"
125, அ—வரத விநாயகர் கோயில் தெரு,
அய்யனூர் ஊற்று; தேவர் குளம். 627 951.

**O காமராசர் மாவட்டம்:**
திரு. உ.ச.எழில்,
வாழ்வாங்கி, அருப்புக் கோட்டை வழி.
காமராசர் மாவட்டம் 626 134.

அமர்த்த ஒப்புதல் எதிர்பார்த்துப் பிற அமர்த்தங்கள் அறிவிக்கப்படும்.

பறம்புக்குடி. பறம்பை அவன்
7-3-92. பொதுச்செயலாளர், உ.த.மு.க.

உ.த.மு.க.பொ.செ.ம.எண்: 41/92 நாள்: 7-3-92

பெறுநர்: உயர்திரு. தி.மு. அரசமாணிக்கனார்,
துணைச் செயலாளர்,
உ.த.மு.க.(சமநிலைக்குமுகாயம்) செயலகம்,
'மெய்யறிவில்லம்', ஆசிரியர் குடியிருப்பு,
ஈரோடு-11.

உ.த.மு.க.வின் சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக்குமுகாய முனைப்பியக்கத்தின் செயலக வினைப்பாட்டிற்கான திட்டத்தை முன்மொழிகின்றேன்.

சாதியற்ற குமுகாயம் அமைதலையும் மத வேறுபாடற்ற அமைப்பையும் உ.த.மு.க. ஏற்கிறது. தமிழர் மதம், தெய்வமதம், கொள்கை மதம், சான்றோர் மதம், என்கிற படிநிலை வளர்ச்சியை அறிந்து செய்ல்படும் மாற்றவியல் நுட்பம் அறிந்தவர் தாங்கள் ; தங்களின் செயலகம்.

'தமிழ் வழிபாட்டுப் பேரவை'க்கான நெறிமுறைகளை ஆராயவும், தக்க வழி காட்டவும் வேண்டும். இப் பேரவைக்கு நெறியாளராகத் திருமிகு. சுப.இலக்குமணன் அவர்களை அமர்த்தம் செய்கிறேன். இப் பேரவைக்கான செயல் திட்டம், கொள்கை விரிவு பின்னர் மேற்கொள்ளப் பெறும். குறிப்பான செயல் திட்டம், கொள்கை வருமாறு.

—தமிழ் வழிபாட்டுப் பேரவை—
உ.த.மு.க. (சமநிலைக் குமுகாயம்) செயலகச் சார்பு அமைப்பு.

நெறியாளர்: சுப. இலக்குமணன்,
பறம்புக்குடி-623 707. உ.த.மு.க. (தமிழகம்).

Scanned with CamScanner

# படை ஒன்று வேண்டும்; தமிழர் பெரும் படை!

பேரா. சாலை. இளந்திரையன்

ஒரு படை வேண்டும்,—தமிழர் பெரும் படை!
அன்றாடம் தமிழ்க்கொலை செய்கின்றவனை
அடித்தே கொன்றிட ஒரு படை வேண்டும்!

தமிழ் என்னும் தனிஒளி வயிரத்தை
ஆரியக் குப்பையால் அமுக்கிடக் குதிக்கும்
அவன்களை நொறுக்கத் தமிழ்ப்படை வேண்டும்!

வாழ்வதெல்லாம் தமிழனாலே—
வாழ்க்கை வசதி எல்லாம் தமிழனாலே,—
பாராட்டுப் பொழிவதோ பார்ப்பான் மேலே!
இப்படிப் பிழைக்கும் எச்சிற் கல்லைகளை
இழுத்துத் தள்ளி இடித்துத் துவைத்திடப்
படை ஒன்று வேண்டும், இளைஞர் பெரும்படை!

அங்கே ஈழத்தில் அயலவன் எதிரே
ஆருயிர் தந்து தமிழ்மானம் காக்கும்
ஆற்றல் மிகுந்த புலிப்படைத் தலைவனை
'அவன் இவன்' சொற்களால் அவமதிக்கின்ற
வானொலி, தொலைக்காட்சிக் குட்டிச் சுவர்களை
இடிமட்ட மாக்கிடத் தமிழ்ப்படை வேண்டும்!

தமிழன் வாழ்வுக்குச் சரிப்பட்டு வராத
பாத்திரம், கோத்திரம், பூணூல் முட்களை
நாளும் நெருப்பிலே அள்ளிப் போட்டிடப்
படை ஒன்று வேண்டும்,—தமிழர் பெரும்படை!

நன்றி. 'அறிவியக்கம்' எண் : 59

---

(2-ஆம்பக்கத் தொடர்ச்சி)

நாம் செயலலிதாவை முன் வைத்து இயங்கும் பார்ப்பனியத்திற்கு வெளிப்படையாகக் கூறிக் கொள்ளோம்.

"தமிழினத்தை அடக்கி, அச்சுறுத்தி ஒடுக்கி ஒழித்துவிடப் பார்க்கும் நேரடியான, மறைமுகமான, அதிகாரத்தனமான, சூழ்ச்சியான எந்த முயற்சியும், பயன் தராது. விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தால், இங்கேயே, இத் தமிழகத்திலேயே புலிகள் தோன்றுவார்கள்! தமிழகத்தில் தந்தை பெரியார் தனித் தமிழ்நாடு கொள்கையை வெளிப்படுத்திய பின்னர்தான் தமிழீழத் தனி நாட்டுக் கொள்கை எழுந்தது. இதனால் அதுவே தவிர, அதனால் இதுவன்று; அடங்கிப் போவதற்கு! விடுதலைப் புலிகள் தனித் தமிழ்நாட்டுக் கொள்கையைத் தூண்டி விடவில்லை; தமிழீழம் வேண்டுவதும், தனித் தமிழ்நாடு கோருவதும் வரலாற்றுக் கட்டாயங்கள். செயலலிதாவின் கையிலுள்ள தமிழினத் தலையாட்டிப் பொம்மைகள் பதினொருவர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதால்,

(முன் பக்கத் தொடர்ச்சி)

1. த.வ.பேரவை, உ.த.மு.க. (சமநிலைக்குழுகாயம்) செயலகத்தின் கீழ் இயங்கும்.
2. தமிழர் மதம், தெய்வ மதம், கொள்கை மதம், சான்றோர் மதம் என்ற படிநிலை வளர்ச்சியைப் போற்றும், திருக்குறள் மெய்ம்மம் பரப்புதல்.
3. தமிழ் மருத்துவம், தமிழ் இசை, தமிழ் வழிபாடு வளரப் பாடுபடும்.
4. அறிவியல் அணுகு முறையைப் போற்றும்.
5. உ.த.மு.க.வின் கொள்கை வழி இயங்கும்.
6. மதத் தாக்கின்மையை உறுதியாகப் பின் பற்றும்.
7. ஆண்டுக்கொரு முறை பேரவை கூடும்.

நெறியாளர் அமைப்புச் செயல்பாட்டை உ.த.மு.க. நெறிமுறைகளுக்கு உள்பட்டு உருவாக்கிப் பொதுச் செயலாளர் ஒப்புதலை பெற்றியங்குதல் வேண்டும்.

செயலகத்தின் துணைச் செயலாளரின் கருத்துரைகளையும் வழிகாட்டுதலையும் கவனத்தில் கொள்ளும்படி நெறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

அன்புடன்,
பறம்பக்குடி, (ஒப்பம்) பறம்பை அறிவன்
1-3-92. பொதுச் செயலாளர்,

படிகள்:
1. பொதுச் செயலாளர் கோப்பு—1.
2. தமிழ்நிலம் —2.
3. உ.த.மு.க. (சமநிலைக் குழுகாயம்) செயலகச் சார்புப் பேரவை. 'தமிழ் வழிபாட்டுப் பேரவை, உ.த.மு.க. (தமிழகம்) நெறியாளர் திருமிகு சுப. இலக்குமணன் பறம்புக்குடி 623 707.
4. திருமிகு நா.அழகப்பத் தமிழனார்— இளந்துறவி— பர்மா குடியிருப்பு—அரியக்குடி— காரைக்குடி வழி. பசும்பொன் மாவட்டம்.

குறிப்பு: இச்சுற்றறிவிப்பைப் படி எடுத்து—அன்பர், ஆர்வலர்க்குப் பரப்புக, கருத்தறிந்து எழுதுக.

---

(முன் பத்தித் தொடர்ச்சி)

செயலலிதாவின் நாட்டியத்திற்கெல்லாம் நரசிம்மராவ் தாளம் போடுகிறார்; அவர் கோரிக்கைக்கு எல்லாம் செவி சாய்க்கிறார். அதனால் செயலலிதாவின் வழியாகப் பார்ப்பனியமும் தலைகொழுத்து ஆடுகிறது. இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவுண்டு. காலம் யாருக்காகவும் ஒடுங்கி விடுவதில்லை. அது மக்கள் இயங்கியலுக்கு உட்பட்டே இயங்குகிறது. எச்சரிக்கை! 0

Scanned with CamScanner

# இந்து மதத்தால் இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்னும் கருத்து சரியானதன்று!

வழக்கறிஞர். ப.பத்மநாபன், சோமனூர்.

புதுப்பேட்டை திரு.ஸ்ரீபரந்தாமன் என்ற வாசகர் 'துக்ளக்' 1-4-90-ஆம் இதழில் 32-33-ஆம் பக்கங்களில், "தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் "ஹிந்து" மதத்தை இலக்காக வைத்துக் குறை கூறுவதைச் சாடும் வகையில் "வள்ளுவனும், கம்பனும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் தமிழுக்கு ஆற்றிய தொண்டை மறக்க முடியுமா? தொல்காப்பியத்தில் கூட குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்குத் திருமாலும், நெய்தலுக்கு வருணனும், மருதத்திற்கு இந்திரனும், பாலைக்குக் காளியும் வழிபடு தெய்வங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே தமிழன் வேறு, இந்து வேறு என்பது இல்லை. இரண்டும் ஒன்றே" என்று விளக்கியுள்ளார்.

இது தவறான விளக்கம். தமிழன் என்பதும் இந்து என்பதும் ஒன்று என்றால், தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இசுலாமியரை, கிறித்துவரைத் தமிழகத்தில் என்னவென்று சொல்வது? இந்துவான குஜராத்தி ஒருவரை அல்லது மராத்தி, பஞ்சாபி, அஸ்ஸாமிய, வங்காளி, ஒரிய மொழி பேசுபவரை என்னவென்று அழைப்பது?

தமிழன் என்பது இனத்தாலும், மொழியாலும் ஏற்படும் அடையாளம்; மதத்தால் அன்று. ஆனால் பண்டைய காலம் முதல் தமிழரின் சமயப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் சிவன், திருமால், முருகன், அம்மன் போன்ற தெய்வ அடையாளங்களை ஒட்டி இருந்து வந்திருக்கலாம். இன்றும் பெரும்பான்மைத் தமிழர்களின் நம்பிக்கைகளும், வழிபடு முறைகளும் அப்படித்தான் உள்ளன. ஆனால் 'இந்து' என்பதும் தமிழர் என்பதும் ஒன்றே என்று விளக்குவது தவறாகும். இன்றைக்கும் பெரும்பாலோர் இந்துக்கள் என்பது சரி. ஆனால், இலக்கக் கணக்கில் கிறித்துவ, இசுலாமியத் தமிழர்கள் இருப்பதையும் மறைக்க அல்லது மறுக்க இயலாது.

ஆனால் "இந்து" தமிழர்களில் இனப்பற்றும், மொழிப்பற்றும் உள்ளவர்கள் தங்கள் சமய அடையாளமாகிய "இந்து" என்பதை வெறுக்கவும், மறக்கவும் காரணங்கள் உண்டு. ஏதோ "இந்து" என்று கூறிக் கொள்ளும் நாம் இந்தியராகவே இருக்க வேண்டும் என்று பரப்பப்படுவதுதான்.

வள்ளுவர் காலத்திலோ, கம்பரின் காலத்திலோ, அல்லது நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்கள் காலத்திலோ தமிழர்களுக்கு "இந்தியர்கள்" என்ற முத்திரை குத்தப்பட்டிருந்ததா? தமிழ் மக்கள் அப்படி மூளைச் சலவை செய்யப்படவும் இல்லை மறுக்க இயலுமா இவற்றை? தொல்காப்பியத்தில் 'இந்தியா' என்றோ 'பாரதம்' என்றோ குறிப்பிடப் பட்டுள்ளதா? இந்திய ஒருமைப்பாடு, இந்தியத் தேசியம், இந்து மதம் என்றெல்லாம் தொல்காப்பியத்தில் அல்லது பண்டைய தமிழ்ப் பாவியங்கள், அல்லது இலக்கியங்கள் எவற்றிலாவது விளக்கியுள்ளார்களா? "விஷ்வ இந்து பரிஷத்", "இந்து முன்னணி" மற்றும் "ஆர்.எஸ்.எஸ்" இயக்கங்களுடன் பண்டைய தமிழர்கள் தொடர்பு வைத்திருந்ததாகச் சான்றுகள் உண்டா? இன்றைய தமிழகத்தில் இவை வேரூன்ற எந்த அடிப்படையில் முயலுகின்றன? 'இந்து மதம்' என்ற அடிப்படையில் தானே? ஆனால் இந்த இயக்கங்களால் தமிழருக்கு, தமிழ் நாட்டிற்கு, தமிழ் மொழிக்கு என்ன பயன்கள் இதுவரை ஏற்பட்டுள்ளன? இனி ஏற்படவுள்ளன?

அன்றைய தமிழ்நாட்டில் உள்ள சமயக் குரவர்களாகிய ஆழ்வார்களும், நாயன்மார்களும் தமிழ்த்தொண்டு செய்ததைப் பெருமையுடன் ஏற்கிறோம். ஆனால் இன்றைய சங்கராச்சாரிகள் தமிழ் மண்ணில் என்ன செய்து கொண்டுள்ளார்கள்? தமிழ்த் தொண்டு செய்கிறார்களா? இல்லை என்றால் தமிழ் மக்கள் "இந்து" என்ற சொல்லை ஏன் வெறுக்கக் கூடாது?

இந்து மதம் தமிழின் உரிமையை தமிழ் நாட்டுக் கோயில்களில் மறுக்கிறதே. இந்திய உச்ச அற மன்றம் மாற்று மொழி சமசுக்கிருதத்தை இங்குள்ள கோயில்களில் வழங்கச் செய்து, தமிழைத் தடை செய்கிறதே! இந்து மதப் பெரியவர்கள் என்ன செய்கிறார்கள்? இந்து மதம் என்ற அடையாளம் தமிழரிடம் இனப்பற்றையும், மொழிப்பற்றையும் குறைக்கும் ஏமாற்று வேலை எனப் புரியவில்லையா?

இருப்பினும், "இந்து" என்ற சமயச் சொல்லைத் தமிழர் ஏற்கவும், பயன்படுத்தவும் நேரிட்டாலும், இந்தியாவையும், இந்திய தேசத்தையும் ஏற்க வேண்டும் என்ற தேவையோ அல்லது கட்டாயமோ இல்லை. இந்துக்களாக வாழ்பவரெல்லாரும் இந்தியர்களாகத்தான் வாழ வேண்டும் என்பதன்று. (Religion is not the usual force to found a State) இந்தியத் துணைக் கண்டத்தின் படிப்பினையே இதற்குச் சான்று. இசுலாம் சமயத்தை அடிப்படையாகப் வைத்துப் பாகிசுத்தான் அமைக்கப்பட்டது. ஆனால் வங்காளி மொழி பேசும் இசுலாமியர்கள் தங்களின் இன, மொழி அடிப்படையில் "வங்காள தேசத்தை"ப் (Bangla Desh) பிரித்து

Scanned with CamScanner

நிறுவிக் கொண்டனர். உருது மொழி பேசுபவர்கள் மட்டும் பாகிசுத்தானைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர். மேலும் நடுவக் கிழக்கு அல்லது மேற்கு ஆசியாவில் இசுலாம் சமயத்தை ஏற்ற அரபு இன, மொழி பேசும் மக்கள் இருபத்தொரு நாடுகளாகப் பிரிந்துதான் வாழ்கிறார்கள்.

புஸ்து மொழி பேசும் ஆப்கானியரும், பார்சி மொழி பேசும் இரானியரும், உருது மொழி பேசும் பாகிசுத்தானியரும், இஸ்லாம் என்ற சமயம் காரணமாக ஒரே நாடு மக்களாக வாழ்வதில்லை. இரானும், இராக்கும் அல்லாவைத் தொழுதாலும், நேற்றுவரை சண்டையிட்டுத்தான் வந்தன.

பர்மா, தாய்லாந்து, வியட்நாம், கம்பூசியா, கொரியா ஆகிய நாட்டு மக்கள் புத்தரை வழிபட்டாலும், மொழி அடிப்படையில் தனித் தனி நாடுகள் கொண்டுதானே வாழ்கின்றனர். ஐரோப்பா முழுவதும் கிறித்துவம்தான். ஐரோப்பியர்கள் மொழிகளுக்கு ஏற்ப நாடுகள் கொண்டு வாழ்வதில்லையா? அஃதாவது மாந்த இனத்தில் மக்கள் மதத்தை விட இன, மொழிக் காரணங்களையே நாடுகள் அமைக்க ஏற்றுள்ளனர். Actully where, religion seeks to destroy ethnie and linguistic interests, people have overlooked the religion and relegated it to insignificant position.

'துக்ளக்' ஆசிரியர் "சோ" முதல், வாசகர் ஸ்ரீ பரந்தாமன் வரை கற்ற அறிவாளிகள் தாம். ஏன் தமிழர்களுக்கு உரிமையுடைய ஒரு விடுதலை நாடு அமையக் கூடாது என்று தகுந்த காரணங்களைச் சொல்லி விளக்குவார்களா? தனிச் சிந்தனையுடைய தமிழர்களுக்கு உதவுவார்களா? For, the cry of self—determination for Tamils through raised at present by some extremist groups or by certain leaders not having any apprecia ble strength of following among Tamil people, is still not without historical reasons and facts. And, it is keeping with the political events and results Europe and Soviet union.

இந்தியா உடைய வேண்டும். மொழி அடிப்படையில் சிறு நாடுகள் இங்குத் துணைக் கண்டத்தில் தோன்ற வேண்டும் என்ற தீர்வான கருத்தை (a decisive resolve) உடையவனல்லன் நான். ஆனால் அப்படி நடந்தால், அஃது இயல்பானதும், இயற்கையானதாகவும்தான் இருக்கும். அப்படி நடப்பது ஏன்பது தவறென்றும் அன்று என எண்ணுகிறோம். தவறு என்றால் வலுவான காரணங்களைக் கூற வேண்டும். பொருத்தமற்ற விளக்கங்களை அல்ல. O

# நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலைகெட்ட கன்னடரின் வெறிச்செயல்கள்.

--மாந்த நேயன்--

கருநாடக மாநிலத் தமிழ் மக்கள் மீது கன்னட வெறியர்களின் கட்டவிழ்த்து விட்ட வன்செயல்களை நன்கறிவீர்.

தென்னகத்து வரலாற்றில் இதுவரையில் நிகழாத தாக்குதல்கள் தற்பொழுது தமிழர் மீது நிகழ்ந்துள்ளன. மனத்தால் நினைக்கவோ செவியால் கேட்கவோ கண்ணால் காணவோ வாயால் சொல்லவோ முடியாத வன்முறைகள்!

தண்டமிழ்த் தாய்க்குலத்தின் மீது வெறியர்கள் நிகழ்த்திய கொடுமை நெஞ்சை உருக்கச் செய்கிறது. தாய்மார்களின் தாலிகள் அறுக்கப்பட்டன. தங்கையரின் கற்பு அழிக்கப்பட்டது.

இதுவரையில் கருநாடக மாநிலத்தில் இக்கொடுமைகளை எதிர்த்து எவரும் குரல் கொடுக்கவில்லை. கரணியம் அச்சமே. நிகழ்ந்து முடிந்த மேலும் நிகழ்ந்து வருகின்ற, வரப்போகின்ற கேடுகளை நினைந்து நினைந்து இரவில் உறக்கமின்றி இருந்து வருகின்றோம். தமிழகத்திலுள்ள மக்கள் தாம் குரல் கொடுக்க வேண்டும். 'இங்குள்ள ஒரு தமிழன் மீது அடி விழுந்தால் அங்குள்ள 10 கன்னடியனின் தலை சிதறும், ஒரு வீடு தாக்கப்பட்டால் பல வீடுகள் தாக்கப்படும்' என்ற வலுவான குரல் நடுவண், மாநிலங்களில் ஒலிக்கச் செய்ய வேண்டும்.

30 ஆண்டுகளாக ஒரு முரடன் தமிழர்களை எள்ளி ஏளனம் செய்வதுடன் கூலிகள் வந்தேறிகள் என்றெல்லாம் நம்மினத்தைப் பழித்துக் கன்னடர் தமிழர் உறவைக் கெடுத்து வருகின்றான்.

தமிழன் சென்ற இடமெல்லாம் காடுகள் திருத்தி நாடுகளாக்கி மேடுபள்ளங்களைச் சரிசெய்து கழனிகளாக்கிச் சுரங்கங்களில் உயிரைப் பணயம் வைத்துப் பொன்னெடுத்து நாட்டை வளப்படுத்திய பின்னர் ஓடு ஓடுடென ஓட்டுகிறான். நம்மிடையே ஒற்றுமையில்லை. அவனை ஏனென்று கேட்க எவருமில்லை. தமிழர்கள் கையாலாகாதவர்கள் என்று நினைத்துச் சில வெறியர்கள் பெங்களூரில் என்ன நடந்தாலும் தமிழர்களைத் தாக்குவதைக் குறியாகக் கொண்டுள்ளனர். கருநாடகத்தின் வளர்ச்சிக்குக் காரணமே தமிழர்கள் தாம் என்று ஆங்கிலேயரின் அரசுப் பதிவிதழ் (கெசட்டியர்) கூறுகிறது. அவற்றை எல்லாம் படித்து அறியும் திறன் அவர்களுக்கில்லை.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Scanned with CamScanner

# இந்தியாவில் தரகு முதலாளிகளும் தேசிய முதலாளிகளும் ஒரு விளக்கம்!

கர்டிப்பட்டி க.கண்ணன். அறி.இ.

## முகவுரை:-

இன்றைய வல்லரசியக் கால கட்டத்தில் உலகிலுள்ள ஒவ்வொரு நாடும், அந்நாட்டிலுள்ள எந்த ஒரு பாட்டாளி வகுப்பும் உலக முதலாளியத்தின் கொடும் பிடிக்குள் சிக்காமல் இல்லை. உலக முதலாளியம் வளர்ந்து நேரடியாக மற்ற நாடுகளைச் சுரண்டுவதை விட்டுவிட்டு, அந்தந்த நாட்டிலுள்ள தரகு முதலாளிகளோடு உறவு கொண்டு, தொடர்ந்து தங்கள் ஆளுமையைச் செலுத்துகிறது. பின்தங்கிய நிலையில் உள்ள மூன்றும் உலக நாடுகளில் பாட்டாளி மக்கள் இத்தகைய தரகு முதலாளிய அரசுகளைத் தூக்கி எரிய முடிவதில்லை. ஏனெனில் பாட்டாளி மக்கள் குமுக மற்றும் பொருளியல் நிலையில் பல்வேறு கூறுகளாகப் பிரிந்து இருப்பதால் ஆளும் தரகு முதலாளியத்திற்கு, சாதி, மதம் போன்ற உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டும், பாட்டாளி மக்களை எளிமையாகப் பிரித்தும் ஆளுமைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கிறது. இந் நிலையில் தரகு முதலாளியத்திற்கு எதிராக, ஓரளவேனும் முரண்பட்டு இயங்குகின்ற தேசியத் தன்மையுடைய சிறு முதலாளிகளை அடையாளம் காண வேண்டும். அவர்களோடு பாட்டாளி மக்கள் இணைந்து முதலில் தரகு முதலாளியத்துவத்தை, வீழ்த்த வேண்டும். ஆகவே முதலில் தரகு முதலாளியத்தையும் தேசிய முதலாளியத்தையும் நாம் தெளிவாக வரையறை செய்து கொள்ள வேண்டும்.

## இந்தியத் தேசியமும் இயற்கையான மொழித் தேசியமும்:-

இன்று இந்தியாவில் பெரிய முதலாளிகள் அனைவரும் ஏதாவதொரு சாதி உணர்ச்சியோடும் மத உணர்ச்சியோடும் இயங்குவதாலும், வெளி நாட்டு முதலாளியத்துவம் இங்கு ஊடுருவுவதை எதிர்க்காததாலும் தேசிய முதலாளிய ஆற்றலாக எந்த ஓர் அரசியல் கட்சியையும் நாம் வரையறை செய்ய முடியாது. மேலும் இங்குள்ள பெருந்தரகு முதலாளிகளுக்குச் செயற்கையாகக் கட்டமைக்கப் பட்ட இந்தியத் தேசியச் சிந்தனை இருக்குமென்று நாம் எதிர்பார்க்கவும் முடியாது. எந்த ஒரு குமுக மாற்றமும் தன்னுடைய வரலாற்று மரபுகளோடு இணைந்ததாகவும் பெரும்பான்மையான பாட்டாளி மக்களின், வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும்.

ஆங்கிலேயர்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் சுரண்டுவதற்காகப் படைத்துறையின் (இராணுவத்தின்) வலிமை கொண்டு பல்வேறு சிறு சிறு மொழித் தேசிய இனங்களாக இருந்த பகுதிகளை **'இந்தியத் தேசியம்'** என்ற ஓர் செயற்கையான அரசியல் கட்டமைப்புக்குள் கொண்டு வந்தனர். மக்கள் அனைவரும் இந்தியத் தேசியத்தில் விரும்பி இணையவில்லை. ஆங்கில வல்லரசியத்திற்கு இரண்டாம் உலகப் போருக்குப் பின் மிகுந்த அரசியல் நெருக்கடி ஏற்பட்டதால், எந்த ஒரு தேசியச் சிந்தனையும் இல்லாத பெருந் தரகு முதலாளிகள் கையிலும் பார்ப்பனிய அதிகார வகுப்பு முதலாளிகளிடமும் ஆட்சி அதிகாரத்தைக் கைமாற்றிக் கொடுத்தனர். இன்று தரகு முதலாளியமும் அதிகார வகுப்பும் முகாமையாக ஆரியப் பார்ப்பனிய இந்து மதச் சார்போடும் பெருமபான்மை இந்தி இனச் சார்போடும் இணைந்து இயங்குவதால், மற்ற மொழித் தேசிய இனங்கள் எந்த ஒரு வளர்ச்சியுமின்றிக் குமுறிக் கொண்டுள்ளன. இந் நிலையில் அந்தந்தத் தேசிய இனங்களிலும் பெருந்தேசியத் தரகு முதலாளியத்தோடு நேரடித் தொடர்புள்ள சிறு தரகு முதலாளியத்தையும் முரண்படுகின்ற சிறு தேசிய முதலாளிகளையும் நாம் அடையாளம் காண வேண்டும். **ஆகவே இயற்கையாக உருவாகின்ற மொழித் தேசியத்தைத்தான் நாம் உண்மையான தேசியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்தியத்தேசியத்தையும் திரா**

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

அடித்துத் துரத்துவதுதான் அவர்களின் அறிவாக வுள்ளது. காழ்ப்பும் உவர்ப்பும் கொண்டு தமிழர்களை மட்டும் பழிப்பதற்கும் மிரட்டுவதற்கும் கரணியம் நம்மிடையே ஒற்றுமைக் குறைவு என்பதுதான்!

இங்குள்ள தமிழர்கள் அமைதியாக வாழ வேண்டுமெனின், அங்குள்ள தமிழர்கள் வலுவான குரலெழுப்புவதுடன் செய்தித்தாள்களும் ஆசிரிய வுரை எழுதுதல் வேண்டும். குடியரசுத் தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் சரியான செய்திகள் அனுப்பப் படல் வேண்டும். உரிமைக்குரல் நாடெங்கும் நமக்காக எழல் வேண்டும்!

மொழிவழி மாநிலமாகப் பிரிந்துள்ளபடி அம் மொழி மக்கள் அந்தந்த மாநிலங்களுக்கே சென்றுவிட, சட்டம் இயற்றிப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம். ஆயின் இது நிகழக் கூடியதா? இங்குள்ள நிலை அப்படித்தான ஆகும் போல் தோன்றுகிறது. 18, 20 அகவைச் சிறுவர்களுக்கு உருபா 60,100 எனப் பணந்தந்து ஏவி மக்களை அடிக்க, கொல்ல நாட்டையே பாழாக்கி வருகின்றனர். O

விட தேசியத்தையும் எல்லோருக்குமான தேசியமாக நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

**பசுமாடும் முதலாளிகளும்:-**

தரகு முதலாளிகளையும் தேசிய முதலாளிகளையும் ஒரு பசுமாட்டை முன்னிலைப் படுத்தி எளிமையாக விளக்கப் படுத்தலாம்.

*பால் கறக்கின்ற பசு மாட்டின் கன்றைக் கொன்று விட்டு, அதன் தோலை உரித்து வைக்கோலைத் திணித்து, அதை நாள் தோறும் காட்டி, மாட்டின் மீதோ கன்றின் மீதோ எந்த வகைப் பற்றுமில்லாமல் பாலை ஒட்டக் கறந்து செல்பவனைப் போல், மக்கள் மீது எந்த வகைப் பற்றுமில்லாமல் அவர்களின் உழைப்பையும் பொருளையும் முழுமையாகச் சுரண்டுபவன் தரகு முதலாளியாவான்.*

*ஓர் உழவனைப் போல் நீண்ட காலத்திற்கு மாடும் கன்றும் தனக்குப் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்தில் கன்றிற்கும் சிறிது பாலை விட்டு விட்டுப் பால் கறப்பவன், மக்கள் மீது ஓரளவேனும் பற்றுள்ள தேசிய முதலாளியாவான்.*

ஆனால் இன்றைய காலகட்டத்தில் தேசிய முதலாளிகளையும் தரகு முதலாளிகளையும் அடையாளம் காணுவது கடினமாக இருந்தாலும், பாட்டாளி மக்களின் பல்வேறு போராட்டங்களின் கடந்த கால வரலாற்றிலிருந்து நாம் பகுத்தாய்ந்து இவர்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

**தேசிய முதலாளிகளும் பாட்டாளி மக்களும்:-**

நம் சிந்தனைகள் உலகம் தழுவியதாக இருந்தாலும் இடைக்காலத்தில் உலகம் முழுவதும் பாட்டாளி மக்களின் அரசுகளை அமைப்பதற்கு முதல் படியாக அந்தந்த நாட்டின் அல்லது பகுதிகளின் குமுகச் சூழலுக் கேற்ப நாம் மக்களை அணி திரட்ட வேண்டியுள்ளது. பகுதி என்பது சிறு சிறு தேசிய இனங்களின் அரசாகவும் இருக்கலாம். இன்றைய உயர் தொழில் நுட்பம், உலக முதலாளிய வளர்ச்சிக்குத் துணையாகவும் பாட்டாளி மக்களை ஒடுக்குவதற்கும் பயன்படுவதால் இவற்றில் பின் தங்கியுள்ள பாட்டாளி மக்கள் நேரடியாக ஒரே சமயத்தில் உலக முதலாளியத்தையும் அதற்குத் துணையாகவுள்ள பல்வேறு நாடுகளிலுள்ள தரகு முதலாளியத்தையும் வீழ்த்த முடியாது. **ஆகவே தரகு முதலாளியத்தோடு தொடர்புள்ள—சில நிலைகளில் முரண்படுகின்ற அந்தந்தத் தேசிய இன முதலாளிகளின் துணையோடு முதலில் தரகு முதலாளியத்தை வீழ்த்த வேண்டும். இதிலிருந்து அடுத்த கட்டமாக பாட்டாளி மக்களின் அரசை அமைக்க வேண்டும். இதுதான் குமுக இயங்கியல் நெறிக்கும் இன்றைய உலக அரசியல் நடைமுறைக்கும் ஏற்றதாக இருக்கும்.**

**முடிவுரை:-**

குமுக நிலையில் பல்வேறு சாதிகளாகவும், மதப் பிரிவினராகவும், தொழில் நிலையில் பல்வேறு பாட்டாளி மக்களாகவும் உள்ள தேசிய இன மக்கள் சரியான திசையில் செல்வதற்குக் குமுகாயச் சிந்தனையாளர்கள் வழி காட்ட வேண்டும். பாட்டாளி மக்கள் வழி தெரியாது ஒருவரோடு ஒருவர் முட்டி மோதித் தன்னைத்தானே அழித்துக் கொண்டுள்ளனர். பொது எதிரியான இந்தியத் தரகு முதலாளியமும் பார்ப்பனிய அதிகார வகுப்பும் மறைந்து கொண்டுள்ளன. ஒரு பகுதி பாட்டாளி மக்கள், இன்னொரு பகுதி பாட்டாளி மக்களோடு இணைவதற்கு இன்றைய நிலையில் மொழியும் அரசியல் முதிர்ச்சியும் மற்றும் புரிதல் நிலையும் தடையாக உள்ளன. ஆகவே தரகு முதலாளியத்தையும் தேசிய முதலாளியத்தையும் பகுத்தாய்ந்து இடைக்காலத்தில் சிறு தேசிய முதலாளிகளை இணைத்துக் கொண்டு பாட்டாளி மக்களின் தலைமையில் தேசிய இனங்களின் அரசுகளை அமைப்பதற்கு குமுகச் சிந்தனையாளர்கள் வழிகாட்ட வேண்டும். O

## தங்கள் முயற்சிகளை மக்கள் அறியவில்லையே!

அன்புமிக்க ஐயா, தமிழ்நிலம் 149 என் கையில் கிடைக்கும் வரை மிகக் கவலையுடனிருந்தேன். அது கிடைத்து உள்ளீடுகளைப் படித்த பின்னரே என் உள்ளம் பதற்றத்திலிருந்து விடுபட்டது. தாங்கள் சிறையிலிருந்து வெளிவந்த செய்தியை நாளிதழ்கள் அறிவிக்கவில்லை. ஆனால் தாங்கள் தளை செய்யப்பட்ட செய்தியை மட்டும் வெளியிட்டிருந்தது. இந்த நாட்டின் ஓரவஞ்சனை என்றைக்கு ஒழியப் போகிறதோ?

தமிழ் மக்களை உரிமையோடு வாழ உணர்வு ஊட்டத் தாங்கள் கொண்டுள்ள முயற்சிகளை யாரும் இன்னும் அறியவில்லை. எப்படியோ வளமாக வாழ்ந்தால் போதும்! மானம், மரியாதை பற்றி யாரும் கவலைப்படவில்லை. இந்தியத் தேசியத்திலிருந்து ஆளுபவர்கள் மக்களுக்காக நாம் இருக்கிறோம் என்ற எண்ணம் அற்றவர்களாகவே இருக்கிறார்கள். எனவே நாட்டு மக்களைப் பற்றிக் கவலைப்படுபவர்களை அடக்கி ஒடுக்கியே ஆளுமை செய்ய விரும்புகிறார்கள். அதற்கு ஏற்றாற் போல மக்களும் 'எவனாண்டாலென்ன, அவனவன் வேலையைப் பார்ப்போம்' எனத் துன்பத்தையும் நுகர்ந்து கொண்டு வாழ்கிறார்கள். இந்த நிலையில் தாங்கள் கூறும் அறிவுரைகளை ஆய்ந்து பார்ப்போர் மிக மிகக் குறைவே. அதனாலேயே தமிழினம் இன்று அழிந்து கொண்டிருக்கிறது. வட இந்திய நடுவண் அரசு தமிழீழ மக்களை அழிக்கும் செயலைத் தமிழ் நாட்டு முதல்வர் மீது சுமத்தி விட திட்டமிட்டுச் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது.

**—அதியமான்,**

Scanned with CamScanner

# அந்தமானிலிருந்தும் தமிழர்கள் விரட்டப்படலாம்!?

அந்தமான், நிக்கோபார் தீவுக் கூட்டங்களில் ஏறத்தாழ 380 தீவுகள் அமைந்துள்ளன. இவற்றுள் ஏறத்தாழ 40 தீவுகளில்தாம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஏனைய தீவுகள் ஆள் நடமாட்டமின்றி வெறுமையாக உள்ளன. ஆகவே அண்டை அயல் நாடுகளில் உள்ள சிலர் வணிக நோக்கங்களுக்காக அவற்றுக்கு வந்து அங்குள்ள விலையுயர்ந்த மரங்கள், மான்கள், முதலைகள், மீன் முதலிய உயிரில்லாப் பொருள்களையும் உயிர்ப் பொருள்களையும் கொள்ளையிட்டுச் சென்று அவற்றை நல்ல விலைக்கு விற்று ஊதியம் பெறுகின்றனர்.

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் மக்கள் தொகை ஏறத்தாழ 4 இலக்கம் ஆகும், இது நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இதைக் காரணம் காட்டி அங்குள்ள துணை ஆளுநர் தயாள் (இவர் ஒரு வங்காளி), அங்கு எல்லைக் கடவு (பாஸ்போர்ட்) முறையைக் கொண்டுவர முயற்சி செய்து வருகிறார். அவர் தம் மாநில மக்கள் நலனுக்காகவே மிகுதியும் பாடுபடுவதாகத் தெரிகிறது. அந்தமான் பகுதிகளில் வங்காளிகளே ஏறத்தாழ 65 விழுக்காடு உள்ளனர். வங்காளத்திலிருந்து எளிதாக அங்குக் குடியேற முடிகிறது.

தமிழர்களும், தெலுங்கர், மலையாளிகளும் அங்குக் கணிசமான தொகையில் உள்ளனர். தமிழர்கள் அங்குள்ள மக்களில் 20 விழுக்காட்டினர் இருக்கின்றனர். மீதி விழுக்காட்டினர் பிற அனைத்து இன மக்களும் அங்குள்ள பழங்குடியினரும் ஆவர். தமிழர்கள் அங்கு 1942க்கு முன்னும் பின்னுமாகக் குடியேறியவர்கள். அவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து கொண்டு வருவது, அங்குள்ள ஆட்சியினர்க்கும் தில்லியில் உள்ள அதிகாரக்காரர்களுக்கும் கண்ணுறுத்தலாக உள்ளது. எனவே தமிழர்கள் குடியேறுவதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்பதோடு, அவர்களிலும் 1972க்குப் பின் வந்தவர்களை வெளியேறச் செய்ய வேண்டும் என்னும் முயற்சியும் நடந்து வருவதாகத் தெரிகிறது.

இந் நிலையில், இலங்கை ஏதிலிகள், போராளிகள் இத் தீவில் ஊடுருவதாகப் பொய்யான பரப்புதல்கள் வேறு செய்யப்படுகின்றன. 1966-ஆம் ஆண்டில் ஒரு சிறு எண்ணிக்கையிலான இலங்கை ஏதிலிகள் இங்குள்ள தொய்வத்(இரப்பர்)தோட்டங்களில் வேலை செய்வதற்காக அமர்த்தப் பட்டது தவிர, வேறு இலங்கையரோ போராளிகளோ அங்குக் குடிபோகவில்லை. ஆனால் இதற்கு மாறாகப் பங்களாதேச ஏதிலியர் (அகதிகள்)வடபகுதி நடுப் பகுதி அந்தமானிலும் நீல் அவ்லாக் பகுதிகளிலும் ஆயிரக் கணக்கில் குடியேறியுள்ளனர்; இன்றும் குடியேறிக் கொண்டுதான் உள்ளனர். டிகிலிப்பூர், பச்சிம் சாகர் முதலிய இடங்களிலும் ஆயிரக்கணக்கான பங்காளதேசிகள் குடியேறி நிலங்களையும் உரிமைப் படுத்திக் கொண்டுள்ளனர். நிலக் குடியேற்றம் செய்யும் வங்காள இனத்தவர் அனைவர்க்கும் அவர்கள் கேட்காமலேயே நிலவுரிமம் (பட்டா) உடனுக்குடன் வழங்கப் படுகிறது.

ஆனால், கடந்த 20, 30 ஆண்டுகளுக்கு முன்பே குடியேறிக் காடுகளைத் திருத்திக் கழனிகளாக்கியும், மாட மாளிகை எழுப்பி வாழ்விடங்களாக்கியும், தீவுகளின் வளர்ச்சிக்குப் பல வகையிலும் உழைத்து வந்த, வரும் தமிழர்களுக்கு வீட்டு மனைகள் கேட்டாலும் கொடுக்கப் படுவதில்லை. அதனால் தமிழர்கள் சிறு சிறு குடிசைகளைக் கட்டிக் கொண்டு வாழ்கின்ற நிலையிலும் கூட, அவர்கள் நிலங்களை வன்கவர்பு (ஆக்கிரமிப்பு) செய்கின்றனர் என்று விரட்டப் படுகின்றனர். அவர்கள் உருவாக்கிய விளை நிலங்கள் அழிக்கப் படுகின்றன. தமிழர்கள் கள்ளக் குடியமர்த்தம் நில ஆளுமை செய்வதாகக் குற்றம் சாற்றப் படுகின்றனர்.

தமிழ் மக்களின் எண்ணிக்கை விழுக்காடு தீவுகளில் அதிகமாகி விட்டால், ஆண்டாண்டுக் காலமாகத் தன்னதிகாரம் செய்து வந்த வங்காளியரின் ஆட்சி வலிமை தகர்ந்து விடும் என்பதும், அதனால் தாங்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்த முடியாது என்பதும், தங்கள் விருப்பப்படி அங்குள்ள புறம்போக்கு நிலங்களை வன்கவர்பு செய்து தாங்களே வாழ முடியாமல் போகும் என்பதும் அங்குள்ள வல்லாண்மை செய்யும் வங்காளியரின் அச்சம், எனவேதான் அந்தமானில் மக்கள் தொகைப் பெருக்கம், குறிப்பாகத் தென்னிந்தியத் தமிழர்களின் குடியேற்றம், இலங்கைத் தமிழர்களின் குடியேற்றம் பெருகிவிட்டதென்று கூக்குரலிடுகிறார்கள்.

அந்தமான் தீவுகளுக்கு வருபவர்களைக்கட்டுப் படுத்த எல்லைக்கடவு முறை கொண்டு வரப்பட வேண்டுமென்று இந்திரா தலைமையமைச்சராக இருந்த பொழுதே கூறப் பெற்றது. ஆனால் அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவருக்குப் பின்னர் வந்த இராசீவும் அதை ஒரு முட்டாள்தனமான கோரிக்கை என்று தவிர்த்து விட்டார்.

எல்லைக் கடவு முறை நடை முறைக்கு வந்தால் வெளி மாநிலத்திலிருந்து வருபவர்கள் சுற்றுலா முறையில் இங்கு வந்து போகலாமே தவிர, நிலையாக இங்கு தங்கவும், நில புலன்கள் வாங்கவும் முடியாத நிலை ஏற்படும்.

தீவுகளின் வளர்ச்சியில் முகாமைப் பங்கினைப் பெற்றுள்ள தமிழினத்தின் வளர்ச்சியைத் தடுக்க

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

# 'தடா'வைக் கையாளும் முறை!

## முன்னாள் உச்சநெறி மன்ற நடுவர் வேங்கடராமையா கருத்து!

கடந்த 22-2-92-இல் மதுரையில் நடந்த அனைத்திந்திய வழக்கறிஞர்கள் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், முன்னாள் உச்சநெறி மன்ற (சுப்ரீம் கோர்ட்) நடுவர் இ.எசு.வேங்கடராமையா, 'தடா' சட்டத்தைப் பயன் படுத்துவது பற்றியும், இந்தியாவில் உள்ள அற மன்ற நடவடிக்கைகள் பற்றியும் கீழ்வருமாறு குறிப்பிட்டார்.

"'தடா' சட்டத்தை உரிய தேவை இருக்கும் போது மட்டுமே பயன்படுத்த வேண்டும். தேவையில்லாது அதைப் பயன்படுத்தக் கூடாது." ('தடா' சட்டம் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் 1911 - இல் அரசு இரண்டக(இராச துரோக)க் குற்றத்திற்குரிய தண்டனையாகச் செய்த சட்டத்தை யொட்டி, இந்திரா ஆட்சிக் காலத்தில் பஞ்சாபில் நடந்த வன்முறையை ஒடுக்குவதற்காகச் செய்து கொண்ட சட்டமாகும். இதை அப்பொழுதிருந்த எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்த பொழுது, இச் சட்டம் பஞ்சாபைத் தவிர வேறு எங்கும் பயன்படுத்தப் படமாட்டாது என்று ஆளுங் கட்சி உறுதி கூறியது. அதே போல் இது பயன்படுத்தப் படாமலிருந்து, முதன் முதலாக செயலலிதாவால் மட்டுமே தமிழகத்தில் பயன்படுத்தப் படுகிறது என்பதை வாசகர்கள் நினைவில் வைக்க.)

முன்னாள் நடுவர் வேங்கடராமையா மேலும் கூறியதாவது:

"மாநில அரசுகளைக் கலைக்க நடுவணரசுக்கு அதிகாரம் தரும் அரசியல் அமைப்பியல் சட்டம் 356-ஆவது பிரிவை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இந்திய மாநிலங்களிலுள்ள உயர்நீதிமன்றச் சட்டங்களும் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றன. இதிலும் கவனம் செலுத்தி இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான உயர் நெறி மன்றச் சட்டங்களை இயற்றுதல் வேண்டும்.

"அத்துடன், வழக்கறிஞர்களும், நடுவர்களும் சாதி உணர்வுகளுடன் செயல்படுவதையும் தவிர்க்க வேண்டும். நாடு மதச்சார்பற்ற நாடு என்று கூறப் பெற்றாலும், அரசியலில் சாதி மதத் திற்குத்தான் முகாமை தரப்படுகிறது. சாதி அடிப் படையில் அதிக ஆதரவு உள்ளவர்களுக்குத்தான் தேர்தலில் நிற்க இடம் கிடைக்கிறது. அத்துடன் சாதி அடிப்படையில்தான் அமைக்கப் படுகிறது. இந்நிலை முழுவதுமாக மாற்றப்பட வேண்டும்."

இம் மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களில், "'தடா' சட்டத்தை அரசு உடனடியாக நீக்குதல் வேண்டும்' என்பதும், 'மகாமகம் திருவிழாவில் காவல்துறை நடத்திய தடியடியால் தான் நூற்றுக்கணக்கான உயிர்கள் பறிபோயின. இந்நிகழ்ச்சி குறித்து, உச்ச நெறி மன்ற ஓய்வு பெற்ற நடுவரைக் கொண்டு உசாவல் நடத்த வேண்டும்' என்பதும் முகாமையான தீர்மானங்களாகும். O

---

தொடர்: 1.

# உ.த.மு.க. பார்வையில் பாவலரேறு!

—பறம்பை அறிவன்,—
(பொதுச் செயலாளர், உ.த.மு.க.)

*[பாவலரேறு கருத்துகள், படைப்புகள், இயக்கம் குறித்த நம் மதிப்பைத் தொடர்ந்து வழங்குவது இப்பகுதியின் நோக்கம் ஆகும். இதன் மீதான கருத்துகளை வழங்கப் படிப் பாளரை வேண்டுகிறேன்.]*

பாவலரேறு அவர்கள், வாழ்க்கை பற்றிய தமது கருத்தைத் தெளிவாக, அதே வேளை சுருக்கமாகக் கூறியுள்ளார். இதனை எல்லாரும் பொன் போல் பொதிந்து கொள்க.

"எவற்றினிலும் நேற்றைவிட
இன்றுயர்தல், வாழ்க்கை" —தமிழ்ச்சிட்டு

(குரல்21. இசை9.) மாந்தனை உருவாக்கும் தந்தை மட்டும் அல்லர், தாயாகவும் விளங்கிக் குழந்தைகளுக்குப் பாடிய தென்றாலும், உ.த.மு.க அன்பர்கள், தங்களின் வாழ்க்கை, இயக்க நோக்கத்திற்கு உறுதுணையாகவும் — ஊற்றுக் கோலாகவும் கொள்ளலாம்! அப் பாடல் தரும் படிநிலைகள்:-

அன்பு செய்தல், அறிவு பெறல்,
ஆழ்ந்து அகலக் கற்றல், முறை ஒழுகல்,
1 தெளிவு பெறல்—வாழ்க்கை.

எண்ணி எண்ணிச் செயப்பழகல்
இயற்கையிலே தோய்தல்
பண்ணுவதில் செப்ப நுட்பம்
2 பயன் கருதல்—வாழ்க்கை.

பெற்ற நலம் பிறர்க்காக்கல்
பிறர் நலத்துக் குழைத்தல்
கற்றவற்றை மற்றவர்க்கும்
3 கனிந்துதரல்—வாழ்க்கை.

தவற்றினிலும் திருத்தமுறல்
தாழ்ச்சியின்றி நிற்றல்
4 நேற்றைவிட இன்றுயர்தல்—வாழ்க்கை.

ஓடு நடை, பரபரப்பு, ஓலங்கள், இரைச்சல், தேடு பொருள், நோக்கம், திரிந்தலைதல்—வாழ்வாகாது. எனவே, வாழ்க்கை நான்கு படி நிலைகளாக் அமைந் திருப்பதைச் சுட்டும் இப்பாடலை இயக்க நிலையில் ஒத்து நோக்கி உணர்ந்து செயல்படும்படி கேட்டுக் கொள்கிறேன். O

Scanned with CamScanner

# உ.த.மு.க. ஒரு வேண்டுகோள்!

அதியமான், துணைச் செயலர். உ.த.மு.க.

அன்புள்ள அமைப்பாளர்களே, பொறுப்பாளர்களே ஆர்வலர்களே!

'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' தமிழ் மொழி, தமிழ் இனம்,தமிழ் நாடு ஆகிய மூன்றினையும், பிற மொழி, இன, நாட்டினர் தாக்கி, அவற்றுக்கான உரிமைகளைப் பறிக்க எடுத்துக் கொள்ளும், அவர்களுடைய முயற்சிகளை முறியடித்து, நமது உயர்வான நிலைமைகளைக் காத்துக் கொள்ள உலக அளவில் இயங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்து கொள்வது, இன்றைய சூழ்நிலையில் மிக முகாமையான கடமையாகக் கொள்ள வேண்டும்.

நம்மீது பிற இனத் (ஆரியப் பார்ப்பனர்) தாக்கங்கள் ஏறத்தாழ 3000 ஆண்டுகளாகத் தொடர்கிறது என்பதைத் திருவள்ளுவப் பேராசான் எடுத்துக் காட்டி எச்சரித்துள்ளார்.

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும் —கு.எண்.457

நல்லினத்தின் ஊங்குத் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல் —கு.எண்.460.

ஆரிய இனத்தோடு தமிழர் இணங்குவதைக் கண்டு அது கேடு என அறிவுறுத்துகிறார். இதனை முன் அறிவிப்பதாகத் தாம் இயற்றிய திருக்குறளில் கூறிப் போந்தார். அதன் மெய்ப்பொருளை உணராமல் இற்றைநாள் வாய் மூடி, கைகட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாளுக்கு நாள் பிற இனத்தவர் குறிப்பாக ஆரியப் பார்ப்பனர், மறைமுகமாகவும் சூழ்ச்சியாகவும், வஞ்சகச் செயலில் இறங்கிப் பற்பல தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருப்பதைத் தமிழர்களைப் பற்றி எழுதிய வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர். அவ்வரலாறுகள் மறைக்கப்பட்டும் சில வேளைகளில் மாற்றப்பட்டும் வருகின்றன.

அவற்றையெல்லாம் கண்டு தெளிந்த மறைமலை அடிகள், திரு. வி. கலியாண சுந்தரனார், பாவாணர், தந்தை பெரியார், பாவேந்தர், அறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவ்வகைச் சூழ்ச்சிகளை எடுத்துக் காட்டி விட்டு மறைந்து விட்டனர். அதன் பின் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் (நிறுவனர் உ.த.மு.க.) தமக்கிருந்த வாய்ப்பான வாழ்க்கை வசதிகளை இழந்து, இந்த இனத்தின் மீது குன்றா அன்பு கொண்டு, அஃது உயர்ச்சி பெற, ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியும் பல கருத்துகளை இந்த இனத்தாரிடம் கூறியும் அவர்கள் நினைத்த அளவிற்கு ஒரு முன்னேற்றத்தைக் காண முடியவில்லை. என்றாலும் தமது பணியை விட்டு விலகாமல் கொள்கைப் பிடிப்பில் உறுதியாக இருந்து பலவகைப் பொருளியல் தட்டுப்பாட்டிலும் தமக்குள்ள ஏந்துகளை இழந்தும், அத் தொண்டைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். மொழி, இன, நாட்டு முன்னேற்றத்திற்கான கருத்துகளைத் **தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்** ஆகிய மூன்று இதழ்கள் வழி நாட்டில் பரப்பி வருகிறார்கள். பாழாய்ப் போன தமிழினம் அக்கருத்துகளை அறிந்தும், அறியாமலும், உணர்வு பெற்றாலும், இந்தியத் தேசிய நீரோட்டத்தில் அமைந்த ஆட்சி அமைப்புகளில் அரசியற் கட்சிகளாக இயங்கிக் கொண்டு, தங்களுடைய வளமான வாழ்க்கையை மட்டும் உயர்த்திக் கொண்டார்களே தவிர, இந்த இனத்திற்காகவோ, மொழிக்காகவோ நல்லதைச் செய்துவிடவில்லை.

இந்தியத் தேசிய நீரோட்டத்திலுள்ள குசராத்து போன்ற வட மாநிலங்களில் அவர்களுடைய மொழி பயிற்று மொழியாக இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் தமிழர்களே ஆளும் சூழலில் கூட கல்விச் சாலைகளில் தமிழ் பயிற்று மொழியாக இல்லாக் கரணியத்தால் ஆங்கிலம் கோலோச்சுகிறது. தமிழர்கள் கட்டிய கோவில்களில் தமிழ், வழிபாட்டு மொழியாக இல்லை. தமிழர்கள் பூசாரிகளாக இல்லை. பூணூலும் சமற்கிருதமும் அங்கு ஆட்சி செய்கின்றன. இதை விட நமக்கு வேறு என்ன இழிவு வேண்டும்?

தமிழர்கள் தோட்டிகளாக, மலம் அள்ளும் இழிந்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதைக் கூட பல நூற்றாண்டுகளாகக் கேட்க முடியாமல் வலிவிழந்து கவனமின்றி இருக்கிறார்கள். இன்னும் எத்தனை எத்தனைக் கொடுமைகள் இங்கு நடந்து கொண்டிருக்கின்றன, இந் நாட்டில் பிறந்த பார்ப்பனர் அல்லாதார் பார்ப்பானிடஞ் சென்று "நாங்கள் படித்து முன்னேற எங்களுக்கு இட ஒதுக்கீடு தாருங்கள்" என்று இரந்து நிற்கும் சூழலைச் சற்று எண்ணிப் பாருங்கள். ஒரு நிமையம் அமர்ந்து சிந்தித்துப் பாருங்கள். ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளுங்கள். அப்போது தான் நம்முடைய அடிமை நிலைமைகளை நாம் உணர்ந்து கொள்ள முடியும். இனியும் இப்படியே விட்டு வைத்தால் மேலும் அடிமைகளாகவே வாழ்ந்து கெட்டு மடிவோம். நம் பின் தோன்றல்களாவது அடிமையற்று வாழ வகை செய்யுங்கள். எனவே நம்முடைய நிலைமைகளை எல்லாம் உண்மையான வரலாற்றுச் சான்றுகளோடு இவ்வினத்திற்குக் காட்டிட வெளியாகும் **தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு** ஆகிய இதழ்களைப் பெற்றுக் கருத்துத் தெளிவு பெற்றுக் கொள்ளுங்கள். உ.த.மு.க. அமைப்புகளைக் கட்டி இயங்கிக் கொண்டிருப்பவர்கள் மக்களைச் சந்திக்கப் பொதுக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகளை நடத்தி சூழ்ச்சி-

(முன்பக்கத் தொடர்ச்சி) TN/MS(C) 657

-களை முறியடிக்கப் பயிற்சி பெற்றுக் கொள்ளுங்கள்.

கொஞ்சம் நஞ்சம் இருக்கும் சொத்துகளை விற்றுப் படித்துவிட்டு, வேலை பெற கையூட்டுக் கொடுக்க முடியாமல், மனம் உடைந்து தற்கொலை செய்து கொள்ளும் இளைஞர்களை எண்ணிப் பாருங்கள். தாய் நாட்டில் வாழ முடியாமல் அயல் நாட்டிற்குச் சென்று சீரழியும் நிலை இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ளதே! உழவர்கள் தாங்கள் விளைவித்த விளைச்சல் பயன்களை நல்ல விலைக்கு விற்க முடியாமல் வட நாட்டானை எதிர்நோக்கி இருக்கும் நிலையை எண்ணிப் பாருங்கள். தொழிற்சாலைகள் மிகுதியாக மூடிக்கிடப்பதால் தொழிலாளர் நிலை சீரழியும் சூழலை ஏன் எனக் கண்டுபிடியுங்கள். பல ஆண்டுகள் இருப்பில் இருந்த சீலைகளைக் கிழவிகளுக்குக் கொடுத்துவிட்டும், சாரமற்ற உணவை சார உணவு எனப் பொய் கூறிக் குமட்டும் அவ்வுணவைத் தமிழ்ச் சிறுர்களை உண்ண வைத்தும், தெருத் தெருவாகச் சாராயக் கடைகளைத் திறந்து குடிக்க வைத்து மயக்க மடையச் செய்தும் ஒப்போலை கேட்க வரும் அரசியல்காரர்களை தேர்ந்து பாருங்கள்.

அமைப்பாளர்கள் பக்கத்து ஊர்களில் உ.த.மு.க. அமைப்புகளைக் கட்டி அவற்றை இயங்கச் செய்யுங்கள். இதற்கான வழிகளைச் செய்து தர தலைமையகத்தோடு தொடர்பு கொள்ளுங்கள். O

நூல்-அஞ்சல்

பெறுநர்

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வஞ்சகக் கூட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அந்த வஞ்சகக் கூட்டம் வெற்றி பெறுமானுல், தமிழர்களின் வாழ்வு அந்தமானிலும் சிக்கலுக்குரியதாகி விடலாம். பின்னர் அங்கிருந்தும் தமிழ ஏதலிகள் தமிழகத்தில் வந்து தஞ்சம் புகலாம். அப்பொழுதும் ஒரு செயலலிதா முதல்வராக இருந்து அவர்களைத் திருப்பி அனுப்பினுல், இவர்கள் எங்கே போவார்கள்? தமிழினம் சிந்திக்க! தனியாளுமை பெறுக! (அடிப்படை) 'தீப்ரவட்டும்';

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு: 70

மக்களின் நிலையான வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் வழிகோலாமல், தற்காலிகப் பயன்களுக்காகச் செயல்படுகிற அரசு பயனுடையதாகாது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 153

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829
உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனுர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.